OS. 22/2024

நாள். 02.12.2025

**வா.சா.2 – கோகுலகண்ணன்**

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

நானும் வாதியும் சேர்ந்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியிடம் நான் தாவா சொத்தை கிரையம் பேசினேன் என்றால் சரிதான். நான் ஏன் கிரையத்தை முடிக்கவில்லை என்றால் போதுமான பணம் இல்லை என்பதால் முடிக்கவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வயதானவர் என்பதால் மேற்படி சொத்தை அவரது மகனான 1ம் பிரதிவாதிக்கு இனாம் எழுதிக்கொடுத்த பின்பு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளலாம் என்று பேசி முடிவு செய்யப்பட்டது என சொல்லியுள்ளது சரியா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வயதானவர் என்பதாலும், அவரிடம் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாது என்பதால், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து செல்ல முடியாது என்பதால்தான் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சியாக எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் இராமநாதபுரம் பாரதிநகரில் உள்ள என் அலுவலகத்தில் வைத்து போட்டேன். கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதும்போது யார்யார் உடன் இருந்தார்கள் என்றால் பாலச்சந்திரன், அவரது அப்பா சாத்தையா, தியாகராஜன், பூமிநாதன் மற்றும் நான் ஆகியோர்கள் இருந்தோம். சாத்தையாவும், தியாகராஜனும் கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்து போட்டார்களா என்றால் கிரைய பத்திரம் எழுதிய அன்று கையெழுத்து போடவில்லை, அதன் பிறகு போட்டார்கள். பாலச்சந்திரன் எனக்கு தரவேண்டிய பணத்தை சாத்தையாவிடம் கொடுங்கள் என்று எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, வாய்மூலமாகத்தான் சொன்னார். என் சகோதரரான வாதி, 1ம் பிரதிவாதி பாலச்சந்திரனுக்காக 2ம் பிரதிவாதி சாத்தையாவுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வெவ்வேறு தேதிகளில் 2ம் பிரதிவாதியிடம்

கொடுக்கப்பட்ட பணம் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் என் அலுவலகத்திலும், வேறு பிறஇடங்களிலும் வைத்து கொடுக்கப்பட்டது. சாத்தையாவுக்குவெவ்வேறு தேதிகளில் கிரைய ஒப்பந்தத்திற்கு பிறகு பணம் கொடுக்கும்போது நான் சாட்சியாக கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பாலச்சந்திரனுக்காக 2, 3ம் பிரதிவாதிகளிடம் வாதி பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், வாதியும் சகோதரர்கள் என்பதாலும், சேர்ந்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருவதாலும், எப்படியாவது தாவா சொத்தை அபகரித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் மேற்குறிப்பு செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.